# இலங்கையில் தேசிய குடிக்கணிப்புகளும் அவற்றின் குறைநிறைகளும்

கா. குகபாலன்

நவீன காலத்தில் ஒவ்வொரு அரசாங்கங்கள் அல்லது தனிப்பட்ட நிறுவனங்கள் விஞ்ஞான ரீதியாக மக்களதும் அவர்கள்தம் பொருளாதாரநிலை, சமூகப் பண்புகள் ஆகியனவற்றினை ஒட்டுமொத்தக் கணிப்பாக மேற்கொள்வதையே குடிக்கணிப்பு எனக் கொள்ளலாம். இக்கணிப்புமுறை உலகில் புராதன காலத்தில் வளர்ச்சியடைந்த சமூகங்களை உள்ளடக்கிய அரசுகளினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. கணிப்பு (Census) என்ற பதம் இலத்தீன் மொழியில் Censere எனவும் ரோமன் மொழியில் Censor எனவும் அழைக்கப்பட்டது. அக்காலங்களில் மக்கள் சம்பந்தமான பதிவேடுகளைத் தயாரித்திருந்தனர். அதாவது மக்கள் நிலை, அவர்கள்தம் சொத்துடமை ஆகியவற்றை ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கொருமுறை கணிப்பிடப்பட்டது. ஏனெனில் வரி அறவிடல், இராணுவ சேவைகளுக்காக ஆண்களது எண்ணிக்கை ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதே அதன் நோக்கமாகவிருந்தது.

## சர்வதேச ரீதியில் கணிப்பு நிலையின் வளர்ச்சி

இக்கணிப்புமுறை கிறிஸ்துவுக்கு முன்னர் பல நூற்றுண்டுகளாக இடம்பெற்று வந்தபோதிலும் ரோமர் ஆட்சியில் பல பகுதிகளில் 6வது **Servius Tullius** (கி. மு. 578 – 534) காலத்தில் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டதற்குத் தக்க சான்றுகள் கிடைத்துள்ளன. ஆனால் கி. மு. 5ஆம் நூற்றுண்டில் **Caesar Augustus** ஆட்சியில் ரோம சாம்ராச்சியம் முழுவதும் கணிப்புகள் இடம்பெற்றுள்ளன. புராதன பபிலோனியா, சீனு எகிப்து ஆகிய நாடுகளில் மிக நீண்ட காலத்திற்கு முன்னரே கணிப்புகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன. மேற்கு நாடுகளில் **King Phillip** ஆட்சியில் ஸ்பெயினின் உதவியுடன் வட அமெரிக்காவில் 1576இல் குடிக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. வட அமெரிக்கப் பகுதிகளில் 1624 – 25களிலும் கனடாவில் 1666இலும் இது மேற்கொள்ளப்பட்டது. இதனை அடுத்து ஐரோப்பாவில் முதன்முதலாக ஐஸ்லாந்து, சுவிற்சலாந்து, அவுஸ்திரியா, நோர்வே, டென்மார்க், பிரித்தானியா ஆகியவற்றில் முறையே 1703, 1750, 1754, 1769, 1769, 1791 ஆகிய வருடங்களில் முதற்கணிப்புகள் இடம்பெற்றன. கணிப்புகளின் தன்மை, அளவு ஆகிய பண்புகள் படிப்படியாக வளர்ச்சிபெற்று வந்துள்ளன. பெரிய பிரித்தானிய குடிக்கணிப்புக்கான அத்திவாரம் Bills of Mortality என்ற மாதாந்த சஞ்சிகையின் மூலம் 15ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து ஆரம்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் குடித்தொகைக் கணிப்பு வளர்ச்சி

இலங்கையில் குடித்தொகை மதிப்பீடு வரலாற்றுக் காலங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டுவரினும் அவைபற்றிய குறிப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளனவேயன்றி கணிப்பு அறிக்கைகளாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

மகாவம்சம், சூழவம்சம், பூசாவளிய, ராசவளிய போன்ற வரலாற்றைச் சித்தரிக்கும் இதிகாசங்களில் படைவீரர்கள், பௌத்தபிக்குகள், பிக்குணிகள், குளங்களின் எண்ணிக்கைகள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் கொண்டு மக்களின் தொகையை அண்மைக் காலங்களில் மதிப்பீடு செய்துள்ளனர். ஆனால் கணிப்புகள் இடம்பெற்றதற்கான சான்றுகள் காணப்படவில்லை. என். கே. சக்கார், ரெனன்ற், அருணாசலம், நைற்றன் போன்றோர் மேற்கூறப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டே மதிப்பிட்டனர். போர்த்துக்கீசர் காலப்பகுதிகளிலும் மதிப்பீடுகளுடன் நிறுத்தப்பட்டன. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வரி அறவிடும் நோக்கோடு குடிக் கணிப்பு முறை மேற்கொள்ளப்பட்டது. 1789இல் கவர்னர் Vander Graff காலத்தில் அவர்களது ஆட்சி அதிகாரத்திற்குள்ளிருந்த கரையோர மாகாணங்களில் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இப்பிரதேசத்தில் மேற்குறித்த ஆண்டில் 817,000 மக்கள் வாழ்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரித்தானியர் ஆட்சியில் கணிப்பு நிலை

பிரித்தானியர் ஆட்சியில் அவர்கள்தம் பொருளாதார விருத்தியினைக் கருத்திற்கொண்டு 1814, 1821, 1827ஆம் ஆண்டுகளில் தேவைக்கேற்ப கணிப்பு நடைபெற்றது. 1814இல் கரையோர மாகாணங்களிலும் (492083), 1821இல் கண்டி மாகாணங்களிலும் (256,835), 1827இல் மேற்குறித்த இரு பகுதிகளிலும் (885, 574) கணிப்புகள் இடம்பெற்றன. மேற்குறித்த கணிப்புகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டதாகவோ அன்றில் திருத்தமான முடிவினைக் கொண்டதாகவோ இல்லை. வரன்முறையில் அமைந்ததும் விஞ்ஞான ரீதியிலானதுமான நாடளாவிய ரீதியில் அமைந்த கணிப்புமுறை 1868ஆம் ஆண்டு 5ஆம் இலக்கக் கட்டளைச்சட்டப்படி 1871ஆம் ஆண்டு முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டது. 1981ஆம் ஆண்டுவரையும் நாட்டில் 12 கணிப்புகள் பெறப்பட்டுள்ளன. 1991ஆம் ஆண்டுக் கணிப்புக்கான ஆரம்ப வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப குடிக்கணிப்பில் பிரித்தானிய தேர்தல் சட்டத்தைத் தழுவியிருந்த போதிலும் சேர் பொன். அருணாசலத்தின் துணையுடன் இந்திய குடிக்கணிப்புச் சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு திருத்தப்பட்டது. பல்வேறு காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கணிப்புகள் படிப்படியாகத் தகவல்களை அதிகமாகச் சேகரிக்கும் பாங்கினைக் கொண்டிருந்தது. அதாவது 1945, 1955, 1980களில் குடிசனக்கணிப்புச் சட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இறுதியாக உருவான சட்டமே புதிய மாற்றத்தினை ஏற்படுத்தியது எனலாம். இதன் மூலம் குடிக்கணிப்பு உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரை உயர்பதவி தொட்டு கடைநிலை ஊழியர்வரை பொறுப்புகளும் கடமைகளும் வகைப்படுத்தப்பட்டன. எவ்வாறெனினும் இதன் இறுதிநிலை மக்கள் கணிப்பாகையால் கணிப்புடன் ஆராய்வது சிறப்பாகும். பொதுவாக கிராமப்பகுதிகளில் கிராமசேவகர் பிரிவு அடிப்படையிலும் நகரங்களில் வட்டாரங்கள் வாரியாகவும் கணிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றன. கிராமங்களில் கிராமசேவகரும் நகரங்களில் நகரத் தலைவர்களும் கணிப்புக்குப் பொறுப்பாளர்களாகவிருப்பர். இறுதிக்கணிப்பினை மேற்கொள்ள பாடசாலை ஆசிரியர் உட்பட அரச உத்தியோகத்தருக்குப் பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் நடாத்தி அவர்களின் உதவியுடன் நிறைவேற்றப்படுகின்றன.

## கணிப்பின் படிமுறை

முதலில் கணிப்பினை மேற்கொள்ளுவதற்கு முன்னர் குடிக்கணிப்பிற்கான திட்டமிடலினை மேற்கொள்ளும் நிலை உண்டு. இத்திட்டமிடற் குழுவிற்குக் குடிக்கணிப்புத் திணைக்களப் பணிப்பாளர் தலைவராகப் பணிபுரிவார். திட்ட காலத்தில் கணிப்பின் நோக்கத்தைப்பற்றியும் அது சம்பந்தமான கருத்துக்களையும் ஒன்றிணைத்துக் கணிப்பில் அக்கறைகொண்ட அரச, அரசு சம்பந்தப்படாத நிறுவனங்களுக்கு அனுப்பி அவர்களது ஆலோசனைகள் பெறப்படும். கணிப்பினை மேற்கொள்வதற்கு முன்னோடியாக (Prelisting) ஆரம்ப அறிக்கையைத் தயாரித்தல் பிரதான கடமையாகின்றது. இதனை மேற்கொள்வதற்குக் கணிப்பு அலகினை (Census Block) கிராம, நகர ரீதியாக நாடளாவிய நோக்கில் பிரிக்கப்படும். கணிப்பு அலகினை உருவாக்கும்போது கிராமப் பகுதிகள் கிராமங்களையும், நகரப் பகுதிகள் வட்டாரங்களையும் அடிப்படையாகக்கொண்டு பாகுபடுத்தப்படும். மேற்குறித்த பகுதிகளில் கணிப்பு அலகினை ஏற்படுத்தும்போது வீதிகள், நடைபாதைகள், குறுக்குத் தெருக்கள், இயற்கை எல்லைகள், மற்றும் வசதிக்கேற்பப் பிரிக்கப்படும். இதன் பின்னர் ஒவ்வொரு அலகுக்கும் வரன்முறையிலமைந்த இலக்கங்கள் கொடுக்கப்பட்டபின்னர் அவ்வப்பகுதிக் கிராமசேவகர்கள் (Prelisting Officer) ஆரம்பநிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றுவார்கள். இவரால் முதலில் பின்வரும் மூன்று அம்சங்கள் சேகரிக்கப்படும். I. வீடுகளின் அலகு (Housing Units) II. வாழும் வீடு (Living Quarters) III. வீடுகளின் அலகு தவிர்ந்த ஏனைய வகைகள் (Non Housing Units) என்பவையாகும். அதாவது குறிப்பிட்ட கட்டிடங்களின் உண்மையான இடஅமைவு, வீட்டைப்பற்றிய விரிவான தகவல்கள், கோவில்கள், பிரதான குடியிருப்பாளரின் பெயர், குறிப்பிட்ட வீட்டில் இரவு நேரங்களில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை, கைத்தொழில், வர்த்தக முயற்சிகள், விவசாய நடவடிக்கைகள், வலது குறைந்தவர்களின் எண்ணிக்கை ஆகியன பற்றிய தகவல்கள் முதலில் பெற்றுக்கொள்ளப்படும்.

குடிக்கணிப்புக்கு முன்னோடியாக, திட்டமிடுதலிற்கு அடுத்த கட்டமாக, எழுமாற்று முறையில் வீடுகள், இடப்பெயர்வு சம்பந்தமான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படும். எழுமாற்று ரீதியாகப் பெற்றுக்கொள்ளும் நிலை சகல நகர, கிராமப் பகுதிகளிலும் 1 – 10 என்ற வரன்முறையிலமைந்த மாதிரி எடுப்பு முறையில் பெற்றுக்கொள்ளப்படும். இவ்வாறுகச் சேகரிக்கப்படும் தரவுகளானது தரவுகளின் இறுதித் தயாரிப்பு நிலையில் உண்மைத் தன்மையை அறிந்துகொள்வதற்குப் பேருதவியாகவிருக்கும் எனலாம். அதாவது பத்துவித மாதிரி எடுப்பு முறையிலமைந்த ஆரம்ப அறிக்கையை வெளியிடுவதற்கு மிகவும் உதவியாகவிருக்கும்.

குடித்தொகைக் கணிப்பில் அடுத்த கட்டம் கணிப்பு அட்டவணையைத் (Census Schedules) தயாரித்தலாகும். இவ்வட்டவணை இருவகைப்படும் I. பொது II. மாதிரி அளவு, இவற்றின் மூலமே தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. பொது அட்டவணையில் குடியிருப்பாளரின் எண்ணிக்கை, ஒழுங்குபடுத்தப்பட்ட குடியிருப்பாளரின் நிலை, பிரதான குடியிருப்பாள

ருக்கான உறவுமுறை, பால், மதம், இனம், பிரசாவுரிமைநிலை, பௌதிகத் தன்மைகள், பிறந்த திகதியும் வயதும், விவாகநிலை, கல்வி நிலையும் பாடசாலை செல்லும் பண்பும், எழுத்தறிவுநிலை, கணிப்புக்கு முப்பது நாட்களுக்கு முன்னர் உள்ள அடிப்படை நடவடிக்கை, வேலையற்றவராயின் வேலை தேடாததற்கான காரணிகள், வேலை தேடிக்கொண்டிருக்கும் காலம், பிரதான தொழில், கைத்தொழில், வர்த்தகத்தின்நிலை, தொழிற்தகுதி, பிரதான குடியிருப்பிலிருந்து பாடசாலை, தொழில் செய்யும் இடத்தின் தூரம், சென்றடைவதற்கான வழிமுறைகள் ஆகியன இடம்பெறுகின்றன.

பொதுத்தகவல்களுடன் வேறு சில தகவல்கள் மாதிரி அளவீட்டினடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன. இடப்பெயர்வு நிலையும் பிறந்த இடம், வாழும் இடம், கிராமத்திலோ அன்றி நகரத்திலோ வாழ்ந்த, வாழுகின்ற காலப்பகுதி, மாவட்ட ரீதியாக முன்னர் வாழ்ந்த இடம், வீட்டு அலகின் விளக்கம், அமைவின் வகை, வீட்டில் வாழ்பவர்களின் எண்ணிக்கை, கூரை, சுவர், நிலத்தின் பண்பு, அறைகளின் எண்ணிக்கை, குடிநீர் பெறப்படும் விதம், மலசலகூட வசதி, மின்சாரவசதி, சமையலுக்குரிய எரிபொருள், வாடகைக் குடியிருப்பின் பண்பு ஆகியனவே அவையாகும். இவ்வகையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள 1981ஆம் ஆண்டு 67000 உத்தியோகத்தர் அமர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் குடிக்கணிப்பு மரபு ரீதியாக Defacto முறையிலமைந்ததாகும். அதாவது குறிப்பிட்ட நேரத்தில் பெறப்படும் முறையேயாகும். இக்கணிப்பு இரு பிரிவுகளாகப் பெறப்படுகின்றது. I. ஆரம்ப அறிக்கை II. இறுதிக் கணிப்பு என்பனவாகும். இறுதிக் கணிப்பின்போது ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்குக் கணிப்புத் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட நாட்களில் விடுகள், கட்டிடங்கள் போன்றவற்றைப்பற்றி முன்கூட்டியே பெற்றுக்கொள்ளப்படுவதே ஆரம்ப அறிக்கையாகும். இறுதிக் கணிப்பில் குறிப்பிட்ட நாளில் தங்கி வாழும் மக்களைக் கணிப்பிடுதலாகும். ஆனல் அன்றிரவு குறிப்பிட்ட வீட்டில் தங்கியிருக்காமல் பொது இடங்களில் குறிப்பாக விமான நிலையம், புகையிரத நிலையம், பேரூந்து நிலையம், காவல் நிலையம் போன்றவற்றில் கடமையாற்றும் மக்கள் விசேட ஏற்பாட்டின் நிமித்தம் அவ்வீட்டின் குடியிருப்பாளர்களாகக் கணிக்கப்படுவார். இவ்வாருகப் பெறப்பட்ட தரவுகள் தலைமை அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அதனை ஒழுங்குபடுத்தி எவ்வளவு விரைவில் வெளியிட முடியுமோ அதனைச் செய்வர். எனினும் 10 வித மாதிரி அளவீட்டின் மூலமே முதலில் பெறப்படும் குடிக்கணிப்பானது நடந்த திகதியிலிருந்து மூன்ருவது நாள் மதிப்பிட்டு அறிக்கை வெளியிடப்படல் வேண்டும்.

மேற்குறித்த கணிப்பு கிராமசேவையாளர் மட்டத்திலிருந்து பெறப்பட்டதாயினும் மாவட்ட ரீதியாகவே வெளியிடப்படுவது வழக்கமாகவுள்ளது. குடித்தொகை சம்பந்தமான வெளியீடு மூன்ருவது மாதத்தினுள் வெளியிடப்படுகின்றது. இவ்வாரம்ப வெளியீட்டில் இனம், மதம், வயதுப்பிரிவுகள் ஆகியன உதவி அரசாங்கதிபர் மட்டத்திலும் நகர மட்டத்திலும் இடம்பெற்றிருக்கும். இதன் பின்னர் 10 வித மாதிரி அளவீட்டினைக் கொண்டதும் முழுமைத் தன்மையைக் கொண்டதுமான குடித்தொகை சம்பந்தமான வெளியீடுகள் வெளியிடப்படுகின்றது.

## நிர்வாகப் பிரிவுகளும் குடிக்கணிப்பும்

இலங்கையில் நிர்வாகப் பிரிவுகளும் அதன் செயற்பாடுகளும் வரலாற்றுக் காலத்திலிருந்து சிறப்புற விளங்கியுள்ளமைபற்றி வரலாற்றினூடாக அறிய முடிகின்றது. இருப்பினும் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலிருந்து நிர்வாகப் பிரிவுகளின் வளர்ச்சி படிப்படியாக ஏற்பட்டு இருக்கின்றது. மத்திய அரசமையத்திலிருந்து மாவட்ட உதவி அரசாங்கதிபர் பிரிவு, கிராம சேவையாளர் பிரிவுகளாக நிர்வாகம் பரவலாக்கப்பட்டுள்ளது. 1970களிலிருந்து நிர்வாகம் மக்களை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகக் கருதினும் அதன் வெற்றி தோல்விபற்றி இவ்வாய்வில் ஆராயப்படவில்லை.

பிரித்தானியர் ஆட்சியில் 1833இல் கோல்புறூக் குழுவினரின் சிபாரிசுவின் பேரில் நாடு ஐந்து மாகாணப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, மத்திய மாகாணங்களே அவையாகும். 1845இல் மேற்கு மாகாணம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுப் புதிய வடமேற்கு மாகாணம் உருவானது. வடமத்திய மாகாணமானது வட மாகாணத்துடன் இணைத்திருந்த நுவரகலாவிய மாவட்டத்தையும், கிழக்கு மாகாணத்துடன் இணைத்திருந்த தமன்கடுவ மாவட்டத்தையும், வடமேல் மாகாணத்தின் ஒரு பகுதியான தெமலபத்து, சீவன்கோரளவையும் இணைத்தே 1873இல் ஏற்படுத்தப்பட்டது. மத்திய மாகாணமானது 1886இல் ஊவா மாகாணம்,மத்திய மாகாணம் என இரண்டாகியது. மேற்கு மாகாணம் 1889இல் மீண்டும் பிரிக்கப்பட்டு சப்ரகமுவ மாகாணம் தோற்றுவிக்கப்பட்டது. எனவே 1889இல் இலங்கை ஒன்பது மாகாணங்களைக் கொண்டதாக அமைந்ததுடன் தற்போது வரையும் அதன் எல்லைகள் மாற்றத்துக்குட்படாமல் இருந்துவருவதைக் காணலாம்.

1833இல் 5 மாகாணங்களில் 23 நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தபோதிலும் காலத்துக்குக்காலம் மாவட்டங்களை ஒன்றிணைத்தலும், அதிகரித்தலும் இடம்பெற்றிருக்கின்றது. இதன் விளைவு குடித்தொகைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதில் மயக்கநிலை ஏற்பட ஏதுவாகியது.1871இல் 18 மாவட்டங்களும் 1881இல் 21 மாவட்டங்களும் காணப்பட்டன. நீர்கொழும்பு (1875), களுத்துறை (1876), வவுனியா (1879) ஆகியனவே அதிகரித்த மாவட்டங்களாகும். 1887இல் புத்தளம் மாவட்டம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சிலாபம் என்ற ஒரு மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது. 1891ஆம் ஆண்டுக் கணிப்பில் 22 மாவட்டங்களாக உயர்ந்தது. 1875இல் கொழும்பு மாவட்டத்திலிருந்த அளுத்குறு கோறளை, கப்பிற்றிகம கோறளையும் விலக்கப்பட்டு புதிய நீர்கொழும்பு மாவட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் 1896இல் மீண்டும் கொழும்பு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 1898ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டம் ஒழிக்கப்பட்டதன் விளைவாக வட மாகாணத்திலுள்ள மாவட்டங்களின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்த துணுக்காய்ப்பகுதி யாழ்ப்பாண மாவட்டத்துடனும், வவுனியா மாவட்டத்தின் ஒரு பகுதியாகவிருந்த பனங்காமம் பகுதியானது மன்னார் மாவட்டத்தின் மாந்தைப் பிரிவுடனும் இணைக்கப்பட்டது. ஏனைய வவுனியா மாவட்ட நிலப்பரப்பு முல்லைத்தீவு மாவட்ட

மானது. இதனுல் 1901ஆம் ஆண்டுக் கணிப்பில் மாவட்டங்கள் இருபத்திரண்டிலிருந்து இருபதாகக் குறைக்கப்பட்டது. எனினும் 1901 — 1953ஆம் ஆண்டுவரை மாவட்டங்களின் எண்ணிக்கையிலும் எல்லைகளிலும் மாற்றம் ஏற்படவில்லை. மேற்குறித்த காலப்பகுதிகளில் சிறிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதாவது முல்லைத்தீவு மாவட்டம் வவுனியா மாவட்டமாகப் பெயர்பெற்றது. இதனுல் வவுனியா முக்கிய மையப்பகுதியானது. 1953ஆம் ஆண்டு மேலும் இரு புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அனுராதபுர மாவட்டத்தின் தமன்கடவா உதவி அரசாங்க அதிபர் பிரிவே பொலநறுவ மாவட்டமானது. 1959இல் புத்தளம், சிலாபம் இரண்டும் இணைந்தது. பதுளை மாவட்டத்துடன் இணைந்திருந்த வெள்ளவாயா, புற்றளை, வெல்லசப் பிரிவுகள் ஒன்றிணைந்து மொனராகலை மாவட்டமாகியது. 1961இல் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கோறளைப்பற்று, ஏருவூர்ப்பற்று, மண்முனைப்பற்று வடக்கு, பிந்தனைப்பற்றின் ஒரு பகுதி, (கி. சே. இல. 146) ஏருவூர் போறதீவு, மண்முனை தெற்கு, கரவாகும், நிந்தாவூர்ப்பற்று ஆகியன விலக்கப்பட்டு அம்பாறை என்ற புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

1978இல் கம்பகா, முல்லைத்திவு என்ற இரண்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. கொழும்பு மாவட்டத்திலிருந்த களனி ஆற்றுக்கு வடக்கேயிருந்த நீர்கொழும்பு, மினுவான்கொடை, வத்தளை, திவிலுப்பிட்டி, மீரிகாமம், கம்பகா, அத்தனைகலை, வேக் (Wake), மகர, ஜாஎல, களனி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை இணைந்து கம்பகா உருவானது. முல்லைத்திவு மாவட்டத்தை, வவுனியா மாவட்டத்திற்குட்பட்டிருந்த கரையோரப்பற்றும் புதுக்குடியிருப்பும் மன்ஞர் மாவட்டத்திற்குட்பட்டிருந்த மாந்தை கிழக்குப்பிரிவும் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு பகுதியான துணுக்காய்ப் பிரிவையும் இணைத்து உருவாக வழிசெய்யப்பட்டது. 1983இல் யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்திருந்த பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரி ஆகிய பிரிவுகளை இணைத்துப் புதிய கிளிநொச்சி மாவட்டம் உருவானது. இத்துடன் இலங்கையில் 25 மாவட்டங்களாக உயர்ந்தது. இவைதவிர மாவட்டங்களின் எல்லைகள் காலத்துக்குக்காலம் மாற்றியமைக்கப்பட்டது. 1979ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்த உடகேவகட உதவி அரச அதிபர் பிரிவு கண்டி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தபோதிலும் 1980இல் மீண்டும் நுவரெலியாவுக்கு மாற்றப்பட்டது. இதேபோலவே அம்பாறை மாவட்டத்துடனிருந்த பிந்தனைப்பற்று வடக்கு, பிந்தனைப்பற்று தெற்குப் பிரிவுகள் 1961இல் மொனராகலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தபோதிலும் 1977இல் மீண்டும் அம்பாறை மாவட்டத்துடன் சேர்க்கப்பட்டது. 1972ஆம் ஆண்டுவரை குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள்ளிருந்த தென்னமரவாடி (31 E), புல்மோட்டை (31 G), பரணமதவாச்சியா (31 F) கிராமசேவையாளர் பிரிவுகளும் கோமரசன்கடவெல உதவி அரசாங்க அதிபர் பிரிவும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு பதவியா உதவி அரச அதிபர் பிரிவோடு இணைத்து அனுராதபுர மாவட்டத்துடன் சேர்க்கப்பட்டது. 1982இல் பதவியா உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்த பதவிசிறிபுர (31 D), தென்னமரவாடி (31 E), பரணமதவாச்சியா (31 F), புல்மோட்டை (31 G) ஆகிய கிராம

சேவகர் பிரிவுகள் மீண்டும் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேபோலவே நகரங்களின் எல்லைப் பரப்புகளும் அதிகரிக்கப்பட்டுள் ளது. உதாரணமாக யாழ்ப்பாண நகரம் நகர அந்தஸ்து பெற்றபோது அதன் பரப்பளவு 7·5 சதுர மைல்களாகவிருந்தது. 1932இல் 3/4 சதுர மைல்களால் அதிகரிக்கப்பட்டது. 1949இல் மாநகரசபையாக உயர்த்தப் பட்டபோது 7·75 சதுரமைல் பரப்பானது, 1968இல் மேலும் 3/4 சதுர மைல்கள் சேர்த்து 8 1/2 சதுரமைல் பரப்பானது. இதுபோலவே ஏனைய பெரும்பாலான நகரங்களும் எல்லை மாற்றங்களுக்குட்பட்டிருப்பதால் குடிக்கணிப்பினை மேற்கொள்வதிலும்பார்க்க இறுதிவடிவமைந்த தரவுகளை நீண்டகாலப் போக்கில் பெற்றுக்கொள்வதில் கஷ்டமாகவுள்ளது.

## குடிக்கணிப்பு முறையில் காணப்படும் குறை நிறைகள்

ஆங்கிலேயர் ஆட்சியின் அரசியல் பொருளாதார கொள்கைகளை மட்டுமல்லாது தமது நாட்டின் அனுபவங்களை தமது குடியேற்ற நாடு களிலும் அறிமுகப்படுத்தினர். இவற்றில் குடிக்கணிப்பும் ஒன்று. 19ஆம் நூற்றுண்டின் முதலரைப் பகுதிகளில் கணிப்புகள் இடம்பெற்றுலும் ஒழுங் கமைந்த கணிப்பு 1871இலிருந்து ஆரம்பமாகின்றது. இக்கணிப்பு உலக நாடுகளின் அனுபவங்களைப் பெற்று, படிமுறை வளர்ச்சியைக் கொண்ட தாகவிருக்கின்றது. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் குடித்தொகைப் பிரிவின் ஆலோசனைகளைக் காலத்துக்குக் காலம் பெற்றுவருதல் வளர்ச்சி யடைந்த நாடுகளில் பெறப்படும் கணிப்புக்களோடு ஒப்பிடக்கூடியளவிற்குச் சிறப்பாக அமைந்திருக்கின்றது. இலங்கையில் குடித்தொகை சம்பந்தமாக 110 வருடகால தகவல்களைப் பெறக்கூடியதாகவிருப்பதும் ஆய்வாளரின் தேவையில் பெரும் பங்கைப் பூர்த்திசெய்கின்றது. இவைதவிர குடித் தொகை சம்பந்தமான தரவுகள்மட்டுமல்லாது பொருளாதார, சமூக தரவுகள் சேகரிப்பதிலும் இலங்கை முன்னணியில் உள்ளது. எவ்வாறெனி னும் குடித்தொகைக் கணிப்பு முறையிலும் தரவுகளை ஒழுங்குபடுத்து வதிலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. குடித்தொகைக் கணிப் பிற்கான நாள் நாட்டில் வாழும் மொத்த மக்களின் வசதிக்கேற்ற வகையில் அமைதல் வேண்டுமென்பது பொதுவான அம்சமானபோதிலும் கடந்த 11 கணிப்புக்கள் அவை சரியானமுறையில் பேணப்படாதது நோக் கற்பாலது. அத்துடன் குறிப்பிட்ட 10 ஆண்டு இடைவெளியில் கணிப்பு மேற்கொள்ளப்பட்டுவந்தாலும் 1946, 1953, 1963ஆம் ஆண்டுக் கணிப் புக்கள் விதிவிலக்காக அமைந்துள்ளதால் குடித்தொகைப் பண்புகளைத் தெரிந்துகொள்ளும் சாதாரண மனிதனுக்குப் பிரச்சனைகள் எழ வாய்ப் பேற்படுகின்றது.

குடித்தொகைக் கணிப்பில் கிராமம் வேருகவும், நகரம் வேருகவும் வேறு படுத்தப்படுகின்றது. குறிப்பாகக் கிராமங்களில் கிராம சேவகர் எல்லை ஒரு அலகாகவும், நகரங்களில் வட்டார எல்லை ஒரு அலகாகவும் கொள்ளப்படுகின் றது. அதாவது நகரங்களிலும் கிராம சேவையாளர் எல்லை வகுக்கப்பட் டிருந்தபோதிலும் நகரக் கணிப்பு வேருகக் கணிக்கப்படுவதால் நகரப் பகுதிகளுக்குள்ளிருக்கும் கிராம சேவையாளர் பிரிவுக் குடித்தொகையைப்

பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இதனுல் கிராம நகர ஒப்பீட்டு அடிப்படையில் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எதிர்காலத்தில் நகரக் குடித்தொகையைப் பெற்றுக்கொள்ளும்போது வட்டார ரீதியாக மட்டுமன்றி கிராம சேவையாளர் பிரிவு அடிப்படையிலும் தரவுகள் சேகரித்தல் அவசியமானது. அதற்கேற்ப வட்டார எல்லைகளும் கிராம சேவகர் பிரிவு எல்லைகளும் ஒன்றுக்கொன்று முரண்படாதவகையில் திருத்தி அமைக்கப்படல் வேண்டும். கிராம சேவகர் பிரிவு அடிப்படையில் குடிக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டுவரினும் ஆரம்ப அறிக்கைகளில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியான தரவுகள் மட்டுமே தரப்படுகின்றன. ஆனுல் அதன்பின்னர் வெளியிடப்படும் தரவுப் பட்டியல்களில் மாவட்டமே ஆகக்குறைந்த அலகாகக் கொள்ளப்படுகின்றது. பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் கிராம சேவையாளர் பிரிவடிப்படையில் மொத்தத் தரவினைக் கொடுப்பதுடன் நின்றுவிடாது இன ரீதியாக, மத ரீதியாகவும் விரிவான தரவுகள் தரப்படுதல் வேண்டும்.

மாவட்ட ரீதியில் தரவுகள் அளிக்கப்படுகின்றபோது குறிப்பாக இனப் பரம்பலில் காணப்படும் வேறுபாட்டினை மாவட்ட ரீதியிலேயே அறிய முடிகின்றது. இது பெரிய நிலப்பரப்பினைக் கொண்ட மாவட்டங்களுள் காணப்படும் குடித்தொகை வேறுபாட்டினை அறிந்துகொள்ள முடியாதுள்ளது. குடித்தொகை சம்பந்தமான பிரச்சனைகளில் மிக முக்கியமானது காலத்துக்குக்காலம் நிர்வாக எல்லைகள் மாற்றம் பெறுவதாகும். நிர்வாகச் சிக்கலைச் சுலபமாக்குவதற்கு நிர்வாகப் பரவலாக்கல் சிறப்பானதே எனினும் நிர்வாக அலகு ஒன்று உருவாக்கப்படும்போதோ அல்லது ஏனைய நிர்வாக அலகுடன் இணைக்கப்படும்போதோ அவைபற்றிய விளக்கங்கள் கட்டியமாகக் குடிக்கணிப்பில் இடம்பெறச் செய்தல் வேண்டும். உதாரணமாக 1978இல் முல்லைத்தீவு மாவட்டம் உருவாக்கப்படும்போது வவுனியா, மன்னுர், யாழ்ப்பாணம் ஆகிய நிர்வாகப் பிரிவுகளின் சில பிரிவுகள் பெறப்பட்டன. அவ்வேளை யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்த துணுக்காய்ப் பகுதி மக்கள் அடுத்த கணிப்பில் முல்லைத்தீவு மாவட்டத்துக்குரியவர்களாகியபடியால் யாழ்ப்பாண மாவட்டக் குடித்தொகையின் வீழ்ச்சி நிலையை எதிர்பார்க்கவேண்டியுள்ளது. இதேபோலவே வவுனியா மாவட்டத்திலும் ஏற்பட்டுள்ளது. இவ்வாருன நிலைகள் இவைபற்றிய அறிவினைக் கொண்டிராதவர்களிடையே குழப்பத்தையே விளைவிக்கும் எனலாம். மேலும் சில நகரப் பகுதிகளின் எல்லைகள் விஸ்தரிக்கப்படும்போது குடித்தொகை வளர்ச்சியில் ஒரு வேகத்தன்மையைக் காணமுடிகின்றது. யாழ்ப்பாண நகர எல்லை கடந்த 50 வருடங்களில் மூன்று முறை விஸ்தரிக்கப்பட்டது. இதன் விளைவாக அடுத்துவரும் குடித்தொகைக் கணிப்பில் வளர்ச்சி வீதம் அதிகரித்துக் காணப்படும். இதன் நிலையைச் சரியான முறையில் தெரிந்துகொள்ளாதுவிடின் வளர்ச்சிக்கான காரணிகளைப் பலவாருகச் சிந்திக்கவேண்டிவரும்.

நகரங்களிலும் கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி உதவி அரச அதிபர் பிரிவுகள் உண்டு. பல சந்தர்ப்பங்களில் இப்பிரிவு நகரத்தை மட்டுமல்லாது நகர விளிம்புப் பகுதிகளையும் கொண்டிருக்கலாம். உதாரணமாக யாழ்ப்பாண நகரம், யாழ்ப்பாண உதவி அரச அதிபர்

பிரிவு என்ற இரு பகுதிகளாகக் கணிப்புத் தரவுகள் கொடுக்கப்படுகின்றன. இதனால் இரண்டாவது பிரிவில் மிகச் சொற்ப மக்களே வாழ்கின்றனர் என்ற மயக்க நிலையை ஏற்படுத்திவிடுகின்றது. எனவே இவைபற்றிக் கணிப்புத் திணைக்களம் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்.

குடித்தொகைக் கணிப்புச் சம்பந்தமான பிரிவு சுயேச்சையான ஒரு அங்கமாகவிருப்பினும் ஆட்சியாளரின் தேவைகளைப் பூர்த்திசெய்வதைப் பல சந்தர்ப்பங்களில் காணமுடிந்தது. 1911ஆம் ஆண்டுவரையும் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் ஆகிய இரு பிரிவினரும் ஒன்றாகவே கணிக்கப்பட்டு வந்தனர். அதன்பின்னர் இவ்விரு பகுதியினரையும் பிரித்தறியும் முறை கொண்டுவரப்பட்டது. 1971ஆம் ஆண்டுவரையும் சிங்களவர்களை கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் எனப் பிரித்துக் கணித்தபோதும் 1981ஆம் ஆண்டுக் கணிப்பில் இரு பிரிவினரும் ஒன்றிணைக்கப்பட்டனர். இதேபோலவே இந்திய முஸ்லீம் என்ற பிரிவினரின் எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ளவில்லை அல்லது இலங்கை முஸ்லீம்களுடனோ அல்லது இந்தியத் தமிழருடனோ சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இவைபற்றிய தகவல்களைக் கணிப்புத் திணைக்களம் வெளியிடாதது கணிப்பின் குறைபாடாகவே கொள்ளவேண்டும்.

தரவுகள் சேகரித்தலைப் பொறுத்தவரை சிறப்பாகச் செயல்பட்டிருந்தபோதிலும் அவற்றை நெறிப்படுத்திக் கிராம ரீதியாகவோ அன்றில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகவோ வெளியிடும் நிலை பல சந்தர்ப்பங்களில் நிகழ்வதில்லை. இதற்குத் தொழில்நுட்பத் தொழிலாளர், நிதி மற்றும் அடிப்படை வசதிகள் சிறப்பாக இல்லாததும் காரணமாகலாம். குறிப்பாக 1963ஆம் ஆண்டுக் கணிப்பு அறிக்கைகள் ஏனைய காலங்களைப் போல வெளியிடப்படவில்லை. 1963 — 1971ஆம் ஆண்டுகளிடைப்பட்ட காலப்பகுதி குறுகியதாயிருந்ததால் அவற்றைப் பூர்த்திசெய்ய முடியவில்லை எனக் கணிப்புத் திணைக்கள அதிபர் தெரிவித்துள்ளார் எனினும் தொடர்ச்சியான தரவுகளைப் பெற்றுக்கொள்வதில் உள்ள இடர்பாட்டினால் ஆய்வு நிலைகளும் அதற்கேற்பவே மட்டுப்படுத்தப்படவேண்டியுள்ளது.

இலங்கையில் குடிக்கணிப்பு Defacto முறையிலமைந்தது. அதாவது கணிப்பு குறிப்பிட்ட நாளிலேயே இடம்பெறும். இருப்பினும் குடிக் கணிப்பு அறிக்கைகளில் சில சந்தர்ப்பங்களில் மிகப் பிழையான தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதற்குக் கணிப்பினை மேற்கொள்ளும் உத்தியோகத்தரின் தரக்குறைவு அல்லது அவற்றினை நெறிப்படுத்தும் ஊழியரின் கவலையீனம் காரணமாகவுள்ளது எனக் கொள்ளவேண்டும். உதாரணமாக 1971ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் கிராமத்தில் கணிசமான அளவு சிங்களவர்கள் இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் அதுபற்றி நுணுகி ஆராய்ந்தபோது மேற்குறிப்பிட்டவர்களின் கவலையீனம்தான் காரணம் எனத் தெரியவந்தது.

மேலும் பிறந்த இடம்பற்றிய தகவல்கள், வருமானம், விவாகநிலை போன்ற விடயங்கள்பற்றிய தகவல்களைச் சிறப்பாகப் பெற்றுக்கொள்ளாமை அல்லது பெற்றுக்கொண்டபோதும் வெளியிடுவதில் காணப்படுகின்ற குறை

பாடு காரணமாக இவை சம்பந்தமான ஆய்வுகள் செய்வதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன.

குடித்தொகை ஆய்வு கடந்த முப்பது ஆண்டுகளில் விரைவான வளர்ச்சியைக் கண்டுள்ளது. அதன் நிலைக்கேற்ப இலங்கையின் குடித்தொகைக் கணிப்புத் தரவுகளைக் கொடுப்பது மட்டுமல்லாது அவற்றிற்கான நம்புதன்மை ஆய்வாளருக்கு அளித்தலில் குடிக்கணிப்புத் திணைக்களம் கூடிய அக்கறை செலுத்தவேண்டும். கணிப்புக்களைப் பெறுதல் இன, மத, மொழிக்கு அப்பாற்பட்டது என்பதையும், அவை வரலாற்றுப் பதிவேடு என்பதையும் கணிப்பு உத்தியோகத்தருக்கு விளக்குதல் அவசியமாகின்றது. மக்களிடமிருந்து பிழையான தகவல்களைப் பெறுதவகையில் இவை சம்பந்தமாக மக்களுக்குப் பழக்கப்படுதல் அவசியமாகின்றது. பெறப்படும் கணிப்புத் தகவல்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வெளியிடப்படுதலில் கூடிய கவனம் செலுத்தல் வேண்டும்.

## உசாவியவை


| | | |
|---|---|---|
| 1. | Asha A. Blend• & Tara Kanitkar | Principles of Population studies, Himalaya publishing House, Bombay, 1982. |
| 2. | Clarke, J. I. | Population Geography, Pergamon Press, Elms ford, New York, 1966. |
| 3. | Cox, P. R. | Demography, 5th edition, vikas publishing House, N. Delhi, 1976. |
| 4. | Kingsley Davis | The Population of India & Pakistan, Russel & Russel, New York, 1950. |
| 5. | Department of Census and statistics | Census of Population 1971, General Report, Colombo, 1975. |
| 6. | Department of Census and statistics | Census of Population and Housing 1981, General Report 1985. |
| 7. | Census of Population | 1871 – 1981 All Reports. |